තිලක් මාරපන - (පා.ම.) විදේශ කටයුතු අමාත්‍ය
திலக் மாரப்பன - (பா.உ.) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
**Tilak Marapana - (M.P.)** Minister of Foreign Affairs

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தி

இலங்கை தனது 70 ஆவது சுதந்திர ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இத்தினத்தில், நாட்டிலும் மற்றும் உலகின் பல பாகங்களிலும் வசிக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உன்னதமான வைபவத்தில், சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க கடுமையாக போராடியவர்களுக்கு மட்டுமன்றி, இந்த சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக தமது இன்னுயிரை நீத்த ஆயிரக்கணக்கானோருக்கும் எனது மரியாதையை செலுத்த விரும்புகின்றேன்.

எமது பயணத்தில் கடந்தகால சாதனைகளை பிரதிபலிப்பதற்கும் மற்றும் எதிர்காலச் சவால்களை மதிப்பீடு செய்வதற்கும் ஒவ்வொரு சுதந்திர ஆண்டு நிறைவும் மிக முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. இலங்கையானது ஒரு தேசமாக அதன் கடந்தகால செயற்பாடுகள், சட்ட ஆட்சி உள்ளடக்கிய ஜனநாயக பாரம்பரியத்துக்கான அதன் உறுதிப்பாடு, சுகாதாரம், கல்வி மற்றும் மிக முக்கியச் சொத்தாக கருதப்படும் நாட்டின் மனித மூலதனம் ஆகியவற்றில் அதன் சாதனைகள் போன்றவை குறித்து பெருமை கொள்ளக்கூடியதாக உள்ளது. இருந்தபோதிலும், துரதிஷ்டவசமாக எமது முன்னேற்றமானது முரண்பாடுகள் மூலம் தடைகளைக் கொண்டதாகவும், கேடு விளைவிப்பதாகவும் அமைந்துள்ளது.

எமக்குப் பின்னாலிருக்கும் பாரதூரமான கடந்த காலத்துடன் பல்வேறு காரணங்களுக்காக வாய்ப்புக்களை இழந்தமையை ஈடுசெய்வதற்கும், அடுத்துவரும் தலைமுறையினருக்கான சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் தத்தமது வேறுபாடுகளை தளர்த்தி அனைத்து இலங்கையர்களும் தற்போது ஒன்றாகச் செயற்பட வேண்டும். பொருளாதார வளத்துடன் இணைந்துள்ள நல்லிணக்கம் மற்றும் நிலைபேறான சமாதானத்தை கொண்ட புதிய இலங்கையை உருவாக்க நாம் கட்டாயம் முயற்சிக்க வேண்டும். எமது 70 ஆவது சுதந்திர ஆண்டு நிறைவை கொண்டாடும் நாம் இலங்கையர் என்ற வகையில் இந்த திடமான தீர்மானத்தை கட்டாயம் எடுத்தல் வேண்டும். இத் தருணத்தில் அரசானது, உற்பத்தித்திறன் மற்றும் பிணைப்பினை அதிகரிக்கும் கண்ணோட்டத்துடன் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அதன் அர்த்தமுள்ள முயற்சிகளை அதிகரிப்பதற்கும், பிராந்தியம் மற்றும் உலகில் வலிமையான தேசமாக உருவாக்குவதற்கும் இலங்கையர்கள் அனைவருக்கும் திடமான அடித்தளத்தை உருவாக்குவதில் தம்மை அர்ப்பணித்துள்ளது.

Tilak Marapana

திலக் மாரப்பன ச.ஆ, பா.உ
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

2018 பெப்ரவரி 04ஆம் திகதி

කාර්යාලය/அலுவலகம்/Office: +94-11-2430221, +94-11-2445498
ෆැක්ස්/பெக்ஸ்/Fax No: +94-11-2430222, වෙබ් අඩවිය/இணைய தளம்/Website: www.mfa.gov.lk, ඊ මේල්/மின் அஞ்சல்/email: minister@mfa.gov.lk
විදේශ කටයුතු අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1, ශ්‍රී ලංකාව. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1, இலங்கை.
Ministry of Foreign Affairs, Republic Building, Colombo 1, Sri Lanka